# மூச்சுக் குழாய் அழற்சி அறிவுரைப் பத்திரம்

(சிறுவர்களில் நீடித்திருக்கும் இருமல், இலேசான காய்ச்சல், மற்றும் உண்ணல் கஷ்டங்களுக்கான காரணம்)

1 வயதிலும் இளமையான பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்குமான அறிவுரை

Sussex and Surrey NHS
Children & Young People's
Urgent Care Network

**பிள்ளையின் பெயர்** _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ **வயது** _ _ _ **அறிவுரை வழங்கப்பட்ட தேதி / நேரம்** _ _ _ _ _

**மேற்கொண்டு அறிவுரை / நடவடிக்கை** _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

**தொழிலறிஞர் பெயர்** _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ **தொழிலறிஞர் கையொப்பம்** _ _ _ _ _ _ _ _ _

## உங்கள் பிள்ளை எப்படி இருக்கிறார்? (போக்குவரத்து வெளிச்ச அறிவுரை)

**சிவப்பு**

கீழுள்ளவற்றில் எந்த ஒன்றும் உங்கள் பிள்ளைக்கு இருந்தால் :

- நீல நிறமான சொண்டுகள்
- அல்லது, பதிலளிக்காமல் அல்லது மிகவும் எரிச்சலுள்ளவராக இருந்தால்
- அல்லது, சுவாசித்தல் கடினமாக இருந்தால்
- அல்லது சுவாசிப்பதில் இடை நிறுத்தல்கள் இருந்தால்
- அல்லது, ஒரு ஒழுங்கற்ற சுவாசித்தல் முறை அவருக்கு இருந்தால்

உங்களுக்கு அவசர உதவி தேவைப்படுகின்றது தயவுசெய்து 999ஐ அழைக்கவும் அல்லது மிக அண்மையிலான மருத்துவமனை அவசர பிரிவுக்கு (A&E) செல்லவும்.

**மஞ்சள்**

கீழுள்ளவற்றில் எந்த ஒன்றும் உங்கள் பிள்ளைக்கு இருந்தால்:

- குறைவாக உண்ணுதல்
- அல்லது வழமையிலும் பார்க்கக் குறைவாகச் சிறுநீர் கழித்தல்
- அல்லது வாந்தி எடுத்தல்
- அல்லது 38 °Cக்கு மேலாக வெப்பநிலை இருத்தல்
- அல்லது சுவாசித்தல் கடினமாக இருத்தல்
- அல்லது உங்கள் பிள்ளையின் உடல் நலம் மோசமடைந்தால் அல்லது நீங்கள் கவலையடைந்தால்

நீங்கள் இன்று ஒரு வைத்தியரை அல்லது தாதியைத் தொடர்புகொள்ள வேண்டும் உங்கள் ஜீபீயின் சிகிச்சை இடத்தை அழைக்கவும் அல்லது NHS 111ஐ அழைக்கவும். 111ஐ அழைக்கவும்.

**பச்சை**

சிவப்பு அல்லது மஞ்சள் பெட்டிகளிலுள்ள அம்சங்கள் எதுவும் இருக்காவிட்டால்.

சுய பராமரிப்பு
மறு பக்கத்திலுள்ள அறிவுரையைப் பயன்படுத்தி வீட்டில் உங்கள் பிள்ளையை நீங்கள் கவனிக்கலாம்

First Version: May 2011 • Final Version: Nov 2013 • Review Date: Nov 2015

## சில உபையோகமான தொலைபேசி எண்கள் (இங்கே சில எண்களை நீங்களும் சேர்த்துக்கொள்ள விரும்பலாம்)

**குடும்ப வைத்தியர் சிகிச்சை இடம்**
(இங்கே எண்ணைக் குறித்துக்கொள்ளவும்)

**என்எச்எஸ் 111**
**111ஐ அழைக்கவும்**
(ஒரு வாரத்தில் 7 நாட்கள் 24 மணித்தியாலங்கள் உள்ளது)

**வருகை தரும் ஆரோக்கிய குழு**
(இங்கே எண்ணைக் குறித்துக்கொள்ளவும்)

**கணினி மூலமான அறிவுரைக்கு: NHS Choices www.nhs.uk** (ஒரு வாரத்தில் 7 நாட்கள் – 24 மணித்தியாலங்கள் உள்ளது )

**குடும்ப தகவல் சேவை:** தொலைபேசி: 01243 777807 இணைய தளம்:: **www.westsussex.gov.uk/family**

மொழி ஆதரவு அல்லது மொழிபெயர்ப்பு உங்களுக்குத் தேவையானால், நீங்கள் பேசுகின்ற ஊழியருக்குத் தயவுசெய்து அறிவிக்கவும்.

**இந்தப் பத்திரத்தின் அதிகளவிலான பிரதிகளுக்கு, தயவுசெய்து எங்களுக்கு மின் அஞ்சல் அனுப்பவும்:**
சிசெஸ்டர் / வோர்திங் பகுதி • contactus.coastal@nhs.net • குறோலி பகுதி : CCCG.Contactus-crawleyccg@nhs.net
ஹோர்ஷம் / மிட் சசெக்ஸ் பகுதி: HSCCG.Contactus-horshamandmidsussexccg@nhs.net.

Sussex and Surrey NHS
Children & Young People's
Urgent Care Network

# மூச்சுக் குழாய் அழற்சி அறிவுரைப் பத்திரம்

(சிறுவர்களில் நீடித்திருக்கும் இருமல், இலேசான காய்ச்சல், மற்றும் உண்ணல் கஷ்டங்களுக்கான காரணம்)

1 வயதிலும் இளமையான பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்குமான அறிவுரை

## மூச்சுக் குழாய் அழற்சி என்பது என்ன ?

உங்கள் பிள்ளையின் சுவாசப் பைகளிலுள்ள காற்று வழிகள் வீக்கமடையும்போது ஏற்படும் மூச்சுக் குழாய் அழற்சி ஒரு தொற்றுநோயாகும். இது உங்கள் பிள்ளை சுவாசிப்பதை அதிகளவில் கடினமாக்கலாம். மூச்சுக் குழாய் அழற்சி என்பது விஷக் கிருமி தொற்றுதல்களால் ஏற்படுகின்றது. குளிர் கால மாதங்களில் இது பொதுவானதாகும். வழமையாக சிறிதளவிலான தடுமன் போன்ற நோய்க் குறிகளை மாத்திரம் இது ஏற்படுத்துகின்றது. பெரும்பாலான பிள்ளைகள் தாமாகவே சுகமடைகிறார்கள். சில பிள்ளைகள், குறிப்பாக இளம் பிள்ளைகளுக்கு சுவாசித்தல் அல்லது உண்ணல் கஷ்டங்கள் இருக்கலாம். அவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய தேவை இருக்கக்கூடும். |.

## என்ன நோய்க் குறிகள் உள்ளன?

- உங்கள் பிள்ளைக்கு மூக்கிலிருந்து நீர் வடியலாம் மற்றும் சிலவேளைகளில் வெப்பநிலையும் இருமலும் இருக்கக்கூடும்
- சில நாட்களுக்குப் பின்னர் உங்கள் பிள்ளையின் இருமல் மோசமடையலாம்.
- உங்கள் பிள்ளை சுவாசித்தல் வழமையிலும் பார்க்க விரைவடைந்து சத்தமாக வரலாம்.
- சுவாசிப்பதற்கு அவர் அதிகளவிலான முயற்சி எடுக்க வேண்டியதாக இருக்கலாம்.
- சிலவேளைகளில், மிகவும் இளம் குழந்தைகளில், மூச்சுக் குழாய் அழற்சி அவர்கள் சுவாசிப்பதில் சிறிய இடை நிறுத்தங்களை ஏற்படுத்தலாம்
- உங்களுக்குக் கரிசனை இருந்தால், மறுபக்கத்திலுள்ள போக்குவரத்து வெளிச்ச அறிவுரையைப் பார்க்கவும்.
- சுவாசித்தல் கூடுதலாகக் கடினமடையும்போது, உங்கள் பிள்ளை மார்பகம் அல்லது போத்தல் மூலமாக அவர்களது வழமையான பாலின் அளவை எடுக்க முடியாதவர்களாக இருக்கலாம்.
- வழமையைக் காட்டிலும் நனைந்த நப்பிகள் குறைவாக இருப்பதை நீங்கள் காணக்கூடும்.
- உணவுக்குப் பின்னர் உங்கள் பிள்ளை வாந்தி எடுக்கக்கூடும் மற்றும் எரிச்சல் அடையக்கூடும்.

## எனது குழந்தைக்கு நான் எவ்வாறு உதவ முடியும் ?

- வழமை போன்று உங்கள் பிள்ளை உண்ணாவிட்டால், சிறிதளவில் ஆனால் கூடுதலான தடவைகள் உணவூட்டவும்.
- மூச்சுக் குழாய் அழற்சி உள்ள பிள்ளைகளுக்குத் துன்பம் மற்றும் அசௌகரியம் போன்ற சில நோய்க் குறிகள் இருக்கலாம். இந்த நோய்க் குறிகளிலிருந்தும் ஓரளவு ஆறுதல் கொடுப்பதற்கு நீங்கள் திரவ பராசிட்டமோல் அல்லது திரவ இபுபுறொவென் கொடுக்க விரும்பலாம். இருந்தாலும், இது சுகவீனத்தின் கடும் தன்மையில் அல்லது அது இருக்கும் கால அளவில் மாற்றத்தை ஏற்படுத்தாது என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும். தயவுசெய்து மருந்துள்ள கொள்கலத்திலுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அவற்றைப் பின்பற்றவும்.
- எல்லா வயதுப் பிரிவினர்களுக்குமாக வாங்குவதற்கு OTC மருந்து கிடைக்காது. உங்கள் மருந்தாளரைக் கேட்கவும்.
- உங்கள் பிள்ளை ஏற்கெனவே மருந்துகள் அல்லது மூச்சை உள்ளிழுக்கும் கருவிகளை (இன்ஹேலர்) பாவிப்பவராக இருந்தால், நீங்கள் இவற்றைத் தொடர்ந்து பாவிக்க வேண்டும். உங்கள் பிள்ளை அவற்றை எடுக்கச் செய்வது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால், உங்கள் மருந்தாளரை, ஹெல்த் விசிட்டரை அல்லது குடும்ப வைத்தியரைக் கேட்கவும். மூச்சுக் குழாய் அழற்சி ஒரு கிருமியால் ஏற்படுவதால் அண்டிபயோட்டிக்ஸ் உங்களுக்கு உதவி செய்யாது,
- உங்கள் பிள்ளை புகையிலை புகையால் பாதிக்கப்படவில்லை எனப் பார்த்துக்கொள்ளவும். புகைத்தலுக்கு அருகில் இருப்பதும் உங்கள் பிள்ளையின் ஆரோக்கியத்தை மோசமாகச் சேதமடையச் செய்யலாம். மூச்சுக் குழாய் அழற்சி போன்ற சுவாசப் பிரச்சனைகளை அது மோசமடையச் செய்கின்றது.
- நீங்கள் வெளியில் புகைத்தாலும், புகை உங்கள் ஆடைகளில் தொடர்ந்து இருக்கும் என்பதை நினைவுகொள்ளவும். .
புகைத்தலை விடுவதில் நீங்கள் உதவியை விரும்பினால், உங்கள் உள்ளூர் குடும்ப வைத்தியர் சிகிச்சை இடத்தில் அல்லது வெஸ்ட் சசெக்ஸ் ஸ்டொப் சுமோக்கிங் சார்விஸ் ஹெல்பலைன் என்பதை அழைத்து நீங்கள் அறிவுரை பெறலாம். தொலைபேசி இலக்கம்: 0300 100 1823 – வெள்ளி – திங்கள் காலை 9 – பிற்பகல் 5 (அல்லது நாசனல் ஸ்டொப் சுமோக்கிங் ஹெல்ப்லைன்: தொலைபேசி: 0800 169 0 169 தினமும் காலை 7லிருந்து இரவு 11 வரை).

## மூச்சுக் குழாய் அழற்சி எவ்வளவு காலத்துக்கு நீடிக்கின்றது?

- மூச்சுக் குழாய் அழற்சியுள்ள பெரும்பாலான பிள்ளைகள் அடுத்த இரண்டு வாரங்களில் முன்னேற்றமடைய ஆரம்பிப்பதற்கு முன்பாக, முதல் 1 – 3 நாட்களின்போது மோசமடைவதாகத் தோன்றுவார்கள். இருமல் சில வாரங்களுக்குத் தொடர்ந்து நீடிக்கலாம். அண்டிபயோட்டிக்ஸ் தேவைப்படாது.
- போதியளவில் அவர் நலமாக இருக்கும்போது உங்கள் பிள்ளை நேர்சரிக்கு அல்லது பகல் பராமரிப்புக்குத் திரும்பிச் செல்லலாம் (அதாவது வழமை போல உண்ணும்போது மற்றும் சுவாசிப்பதில் கஷ்டம் இல்லாதிருக்கும்போது) .
- உங்கள் பிள்ளை நன்றாகச் சுகமடைந்தால், வழமையாக உங்கள் மருத்துவரைப் பார்க்கத் தேவையில்லை. ஆனால், உங்கள் பிள்ளையின் முன்னேற்றம் குறித்து நீங்கள் கவலையடைந்தால், உங்கள் ஹெல்த் விசிட்டருடன், நடைமுறை தாதியுடன் அல்லது ஜீபியுடன் கலந்துரையாடவும் அல்லது NHS 111 ஐ தொடர்புகொள்ளவும். .

இந்த வழிகாட்டி பின்வரும் சூழலில் எழுதப்படுகின்றது. பொருத்தமானவாறு NICE, SIGN, EBM data மற்றும் NHS சான்று மற்றும் ஏனையவற்றைக் கவனமாகப் பரிசீலித்த பின்னர் இந்தப் பத்திரம் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் தமது மருத்துவ தீர்மானத்தை ஏற்படுத்துவதற்கு முன்பாக இதனைக் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கு ஆரோக்கிய பராமரிப்பு தொழிலறிஞர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். இருந்தாலும் , நோயாளி மற்றும் / பராமரிப்பாளரைக் கலந்தாலோசித்து தனிப்பட்ட நோயாளியின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு தீர்மானங்களை எடுப்பதற்கு ஆரோக்கிய பராமரிப்பு தொழிலறிஞர்களுக்குள்ள தனிப்பட்ட பொறுப்பை இந்த வழிகாட்டி விலக்காது.

Based on Scottish Intercollegiate Guidelines (SIGN) 2006 Guideline No. 91 Bronchiolitis in children - http://www.sign.ac.uk/guidelines/fulltext/91/index.html

First Version: May 2011 • Final Version: Nov 2013 • Review Date: Nov 2015